வாழ்வியல்

இயல் இரண்டு

# திருக்குறள்

## வினைசெயல் வகை

1. *பொருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்*
   *இருள்தீர எண்ணிச் செயல்.*

   பொருள் : வேண்டிய பொருள், ஏற்ற கருவி, தகுந்த காலம், மேற்கொள்ளும் செயலின் தன்மை , உரிய இடம் ஆகிய ஐந்தையும் ஐயம்தீர ஆராய்ந்து ஒரு செயலைச் செய்ய வேண்டும்.

2. *வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்*
   *யானையால் யானையாத் தற்று.**

   பொருள் : ஒரு யானையைக்கொண்டு மற்றொரு யானையைப் பிடிப்பர். அதுபோல ஒரு செயலைச் செய்யும்போதே அச்செயலால் மற்றொரு செயலையும் செய்து முடித்துக் கொள்ளல் வேண்டும்.

   அணி : உவமை அணி

## அவை அஞ்சாமை

3. *கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்*
   *கற்ற செலச்சொல்லு வார்.*

   பொருள் : தாம் கற்றவற்றைக் கற்றவர்முன் தெளிவாகச் சொல்ல வல்லவர், கற்றவருள் மிகவும் கற்றவராக மதிக்கப்படுவார்.

   அணி : சொற்பொருள் பின்வருநிலை அணி

4. *கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற*
   *மிக்காருள் மிக்க கொளல்.*

   பொருள் : கற்றவர் முன் தான் கற்றவற்றை மனத்தில் பதியும்படி சொல்லி, அவர்கள் கற்றவற்றையும் கேட்டு, அறிந்து கொள்ள வேண்டும்.

## நாடு

5. *உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்*
   *சேராது இயல்வது நாடு.**

   பொருள் : மிக்க பசியும், ஓயாத நோயும், அழிவு செய்யும் பகையும் சேராமல் நல்ல வகையில் இயங்குவதே நாடாகும்.



7th Std - Tamil_2025_Term_III_Unit 2.indd 42 23/01/2025 14:31:25